2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

பால் குளிரூட்டும் நிலையம்

***53115—திரு. S. சந்திரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரன் அவர்கள் கேட்டிருக்கின்றார். ஓரிடத்தில் பால் கொள்முதல் செய்ய குறைந்தபட்சம் 3,000 லிட்டருக்குக் குறையாமல் இருக்கும்போது மட்டுமே அங்கு தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் சராசரியாக நாளொன்றுக்கு 200 லிட்டர் என்ற அளவில்தான் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, அங்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிக் கடன் அட்டைகள் வழங்குதல், அதன்மூலம் அரசு மானியத்தில் கறவை மாடுகள் பெற்றுத் தருதல், சங்கத்திற்குக்*

கட்டடம் கட்டித் தருதல் ஆகியவற்றின்மூலம் எதிர்காலத்திலே பால் உற்பத்தி கூடும் வாய்ப்புள்ளது. எனவே, இதனை நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட முதல் கேள்விக்கு பதில் அளிக்கிறேன். திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 188 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து உற்பத்தியாகும் பாலை கையாள காக்களூரில் ஒரு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட பால்பண்ணை செயல்பட்டு வருகிறது. கே.ஜி. கண்டிகையில் 8,000 லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையமும், ஊத்துக்கோட்டையில் 5,000 லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையமும், திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாலாபுரத்தில் 5,000 லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையமும், பட்டரைபெரும்புதூரில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

திருத்தணி தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு வட்டத்தில் தற்போது 5 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சராசரியாக நாளொன்றுக்கு 200 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு, அருகிலுள்ள கே.ஜி. கண்டிகை தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, தற்போதைய நிலையில், பள்ளிப்பட்டு வட்டத்தில் பால் உற்பத்தி குறைவாக உள்ளதாலும், அதனருகில் கே.ஜி. கண்டிகையில் 8,000 லிட்டர் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருவதாலும், பள்ளிப்பட்டு வட்டத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டிய சூழ்நிலை எழவில்லை. பள்ளிப்பட்டு வட்டத்தில் பால் உற்பத்தி அதிகரிக்கும்பட்சத்தில், அங்கு தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்

2023 ஏப்ரல் 6]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதி-திருத்தணி-சென்னை நெடுஞ்சாலை ஆயிரக்கணக்கான பயணிகள் பயன்படுத்தக்கூடிய சாலையாகும். அந்த நெடுஞ்சாலையில் நவீன வசதிகளுடன்கூடிய* Aavin Hi-Tech Parlour *அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில், அவர் இடத்தை அடையாளம்காட்டும்பட்சத்தில், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே நாம் செய்து தருவோம். அதற்கான ஏற்பாடுகளை நிச்சயம் செய்து தருவோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

தொழிற்பயிற்சி நிலையம்

***60381—திரு. S. அம்பேத்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*